# சார்பு நீதிமன்றம், மேட்டூர்

முன்னிலை: திரு.S.முத்துராமன், B.L.,

சார்பு நீதிபதி, மேட்டூர்.

2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ம் நாள் வியாழன்கிழமை
(நிகழும் சுபகிருது வருடம் வைகாசி மாதம் 26 ம் நாள்)

**அசல் வழக்கு எண்: 114/2012**

CNR NO: TNSA160000292012

**M/S கிரசண்ட் ஸ்ட்ரக்சுரல்ஸ் சார்பாக**
**அதன் உரிமையாளர் I.பார்த்திபன் ... வாதி**

**/எதிராக/**

**M/S. NCP சர்வீசஸ்,**
**Represented by its நிர்வாக இயக்குநர்,**
**நாக்பூர், By its மேலாளர் கோஸ்வாமி. .... பிரதிவாதி**

இவ்வழக்கானது, கடந்த 01.06.2022 ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.M.ஜெகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்காக வழக்கறிஞர்கள் திருமதி.G.உமாமகேஸ்வரி மற்றும் திரு.N.கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

1) இவ்வழக்கானது, வழக்கு தொகை மற்றும் பின்வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

2) வாதிதரப்பு வழக்குரையின் சுருக்கம் :

வழக்கு பிரதிவாதிக்கு நாக்பூர் MIDC Hingna ரோடு கதவு எண்.65 ல் அலுவலகம் உள்ளது. மேற்படி பிரதிவாதியின் கம்பெனிக்கு கோஸ்வாமி என்பவர் தான் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். மேற்படி பிரதிவாதி கம்பெனியுடன் வடசென்னை தெர்மல் பவர் ஸ்டேஷனில் Dense phase pneumatic conveying system– த்திற்காக சைட் பணி முழுவதுக்குமான கான்ட்ராக்ட் ஒன்றை கடந்த 21.03.2010 ம் தேதி வாதி போட்டுள்ளார். பிரதிவாதி கம்பெனி வாதியிடம் மேற்படி

காண்ட்ராக்ட் வேலையை அவர்கள் கடித எண்.NCP–2546/CS/LIO/PG என்பதன் மூலம் ஒப்பந்தம் செய்தனர். அந்த ஒப்பந்தத்தின்படி மேற்படி பிரதிவாதி கம்பெனி பைப்லைன் அகற்றும் முழுப் பணியை வாதியிடம் ரூ.11,00,000/– (ரூபாய் பதினொன்று இலட்சம் மட்டும்) த்திற்கு ஒப்பந்தம் செய்தனர். மேற்படி பணியை மெட்ராஸ் சிமெண்ட் வடசென்னை தெர்மல் பவர் ஸ்டேஷனில் செய்யவேண்டும். வாதியிடம் பிரதிவாதி ஒப்புவித்த பணியை வாதி செவ்வனே உண்மையுடன் ஒப்பந்த காலத்திற்குள் முடித்துக்கொடுத்துவிட்டார். பணியை முடித்ததை பிரதிவாதியின் சைட் பொறியாளர் நேரில் ஆய்வு செய்து, உறுதி செய்து, அதற்கான முடிக்கப்பட்ட சான்றிதழையும் வழங்கினார். மேற்படி பணியை வாதி செய்து கொண்டிருந்தபோதே பிரதிவாதிக்கு மேற்படி பணிக்கான பில்களையும், இன்வாய்ஸ்களையும் அவ்வப்போது அனுப்பினார். மேற்படி ஒப்பந்தத்தின்படி வாதிக்கு பிரதிவாதி அட்வான்ஸ் தொகையாக ரூ.6,57,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரம் மட்டும்)த்தை கொடுத்தார். மொத்த ஒப்பந்தத்தொகை ரூ.11,00,000/– (ரூபாய் பதினொன்று இலட்சம் மட்டும்) மேற்படி பணியை முடித்தபின் பிரதிவாதி வாதிக்கு ரூ.4,43,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரம் மட்டும்) தர வேண்டியிருந்தது.

2.2) மேலும், மேற்படி ஒப்பந்தத்தின்படி வாதி கூடுதல் வேலையை அதே இடத்தில் பிரதிவாதியின் மற்றொரு சார் நிறுவனமான Mecgale Pneumatics Pvt. Ltd., க்காக செய்து கொடுத்தார். மேற்படி கூடுதல் பணியின் மொத்த தொகை ரூ.2,42,600/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து அறநூறு மட்டும்) ஆகும். இது சேவை வரியும் உள்ளடங்கியது. வாதி மேற்படி வேலைகளை நீண்ட காலத்திற்கு முன்னரே முடித்துவிட்டார். எனவே, வாதிக்கு பிரதிவாதியானவர் மேற்படி பணிகளை வாதி செய்வதற்காக மொத்தம் ரூ.6,85,600/– (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து அறநூறு மட்டும்) தரவேண்டியிருந்தது. அதாவது முதல் ஒப்பந்தத்திற்காக ரூ.4,43,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரம் மட்டும்)மும், கூடுதல் வேலை செய்ததற்காக ரூ.2,42,600/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து அறநூறு மட்டும்)மும் சேர்த்து மொத்தம் ரூ.6,85,600/– (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து அறநூறு மட்டும்) ஆகும். அதன்பின் பலமுறை பிரதிவாதியை தொடர்புகொண்டு, மேற்படி தொகையை கொடுக்கும்படி கேட்டும், பிரதிவாதிக்கு வாதி பலமுறை கடிதம் எழுதியும், ஈமெயில் அனுப்பியும் தொகையை கொடுக்கும்படி கேட்டார். சிறுதொகைக் கூட வாதிக்கு பிரதிவாதி கொடுக்கவில்லை.பிரதிவாதி, வாதிக்கு கொடுக்கவேண்டிய ரூ.6,85,600/– (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து அறநூறு மட்டும்)ஐ தராததால் பிரதிவாதி ஒப்பந்தத்தை மீறிய செயலை செய்துள்ளார். எனவே, பிரதிவாதி, வாதிக்கு மேற்கண்ட தொகைக்கு 18% கூடும் வட்டி சேர்த்து செலுத்த

கடமைப்பட்டுள்ளார். எனவே, பிரதிவாதிக்கு 13.05.2012 ம் தேதி வாதி வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார். பிரதிவாதியின் இந்த செயல் வாதியின் தொகையை தராமல் ஏமாற்ற நினைக்கும் எண்ணத்தைக் காட்டுவதாக உள்ளது. மேற்படி பிரதிவாதி 3 கம்பெனிகள் நடத்தி வருகிறார். 3 இடங்களில் அலுவலகம் உள்ளது. இந்த பிரதிவாதிக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளன. எனவே, தாவா தொகையை வட்டியுடன் திருப்ப செலுத்தக்கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

3) <u>பிரதிவாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம் :</u>

இந்த வழக்கு பொய்யானது, உண்மைக்கு புறம்பானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த தாவா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆளுகைக்கு உட்பட்டது அல்ல என்றும், வாதி கோரிய பரிகாரம் எதிர்வாதிக்கும், வாதிக்கும் உள்ள உடன்படிக்கை ஆகும் என்றும், மேற்படி ஒப்பந்தத்தில் ஏதாவது பிரச்சினை என்றால் நாக்பூரில் வைத்துதான் தீர்க்கவேண்டும். இங்க அல்ல என்றும், ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றும், இந்த தாவா வாதியால் மோசடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தூயகரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. வாதிக்கும், எதிர்வாதிக்கும் இடையேயான பணியானது 21.03.2010 அன்று ஒப்பந்தமானது. மேற்படி தாவாவில் கூறியுள்ள பணிக்கு ரூ.11,00,000/- (ரூபாய் பதினொன்று இலட்சம் மட்டும்) செலவாகும். தாவா பாரா 7 ல் கூறியுள்ளவை உண்மைக்கு புறம்பானவை ஆகும். பணி ஒப்பந்தத்தில் கூறியுள்ளது முற்றிலும் மாறானது. மேற்படி ஒப்பந்தத்தில் எதிர்வாதியானவர் எழுதிக்கொடுத்துள்ளார். இதற்காக சான்றும் வழங்கப்பட்டது. வாதியானவர், எதிர்வாதிக்கு பில் மற்றும் இன்வாய்ஸ் உடனுக்குடன் அனுப்பிவைத்துள்ளார் என்று கூறுவது தவறு. இந்த எதிர்வாதியானவர் வாதிக்கு ரூ.4,43,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரம் மட்டும்) மட்டுமே தரவேண்டும் என்றும், மேலும், கூடுதலாக வேலை செய்யவில்லை. போட்டுள்ள தொகை மறுக்கத்தக்கது. ஒப்பந்தப்படி வேலை பாதியிலேயே நிறுத்திவைக்கப்பட்டது. எனவே, எதிர்வாதி இதற்கு பொறுப்பாகமாட்டார். இந்த பிரதிவாதி ஒப்பந்த விதிகளை மீறியுள்ளதாக வாதி கூறுவது முற்றிலும் தவறானது. வாதி அனுப்பிய சட்ட அறிவிப்புக்கு இந்த பிரதிவாதி சரியான காரணங்களைக்கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். இந்த தாவாவில் எந்த முகாந்திரமும் இல்லை. நீதிமன்ற முத்திரைக்கட்டணம் சரியாக கணக்கிடப்படவில்லை. எனவே வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்பதாகும்.

4) வாதி வழக்குரை மற்றும் பிரதிவாதியின் பதிலுரையை பரிசீலனை செய்து கடந்த 02.08.2013 ஆம் தேதியன்று இந்த நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்துள்ளது.

| | |
|---|---|
| 1. | Whether this court has Jurisdiction to try the Suit? |
| 2. | Whether the Defendant is enable to pay the suit claimed amount to the plaintiff? |
| 3. | Whether the plaint has cause of action? |
| 4. | Whether the plaintiff is entitled to get the reliefs as prayed for? |
| 5. | To what relief, the plaintiff is entitled to? |

5) இவ்வழக்கு வாதி அவர்தரப்பு வழக்கை நிரூபிக்கும் வண்ணம், வாதிநிறுவனத்தின் சார்பாக அதன் உரிமையாளர் திரு.பார்த்திபன், த/பெ.அய்யம்பெருமாள் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், வாதிதரப்பில் திரு.சம்பத்குமார், த/பெ.கிருஷ்ணமூர்த்தி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் திரு.வாசுதேவன், த/பெ.சீனிவாசன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலமாக பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) வாதி தரப்பில் ஆஜரான கற்றார்ந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், வாதி அவர்தரப்பு வழக்கினை அவர்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக தெளிவாக நிரூபணம் செய்துள்ளார் என்றும், வாதியின் வழக்கினை அனுமதித்து பிராதில் கோரியவாறு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கவேண்டும் என்று வாதுரை செய்தார்.

7) பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றார்ந்த வழக்கறிஞர் அவர்தரப்பு வாதுரையின்போது, வாதியின் வழக்கு பொய் வழக்கு என்றும், இந்த பிரதிவாதி வாதிக்கு எவ்வித தொகையும் செலுத்த தேவையில்லை என்றும், வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதியின் வழக்கு முதல்நிலையிலேயே தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கூறியுள்ளார்.

8) இருதரப்பு கற்றார்ந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

9) <u>எழுவினா. 1 :</u>

எழுவினா 1ல் கண்டபடி இந்த நீதிமன்றத்திற்கு இந்த வழக்கினை விசாரிக்க ஆள்வரை வரம்பு உள்ளதா? என்பதேயாகும்.

9.2) வாதி இந்த வழக்கை தான் கருமலைக்கூடலில் பேப்ரிக்கேட்டர்ஸ் காண்ட்ராக்ட் தொழில் செய்து வருவதாகவும், அவருடைய அலுவலகம் அதே முகவரியில் இயங்கி வருவதாகவும், பிரதிவாதி நிறுவனத்தோடு 21.03.2010ல் ஒரு ஒப்பந்தம் போட்டதாகவும், அந்த ஒப்பந்தம் வா.சா.ஆ.1 எனவும், அதன்படி பிரதிவாதி கம்பெனி பைப்லைனை முழுவதுமாக அகற்ற வேண்டும் என்றும், அந்த பணியை மெட்ராஸ் சிமெண்ட் வடசென்னை தெர்மல் பவர் ஸ்டேஷனில் செய்யவேண்டும் என்று ஒப்பந்தம் போட்டதாகக் கூறியுள்ளார். ஆனால் பிரதிவாதி தரப்பில் இந்த நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு இல்லையென்றும் வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திலேயே காலம் G ல் வழக்கைப் பொறுத்து ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதைப்பொறுத்து விசாரிப்பது நாக்பூரில் உள்ள இசைவு தீர்ப்பாயம் (arbitration) தான் என்றும், ஆகவே, மேற்படி ஒப்பந்தத்தின்படியே பார்த்தாலும் இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லையென்றும் கூறியுள்ளார்.

9.3) வாதியின் வழக்குப்படி பார்த்தால் பிரதிவாதி ஒப்பந்தப்படி தனக்குரிய தொகையை செலுத்தவில்லை என்பதாகும். ஆனால், பிரதிவாதியோ வாதி ஒப்புக்கொண்டபடி பணியை முழுவதுமாக செய்யவில்லை என்றும், ஆனால், அவருக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதல்ல என்றும் கூறியுள்ளார். பொதுவாக ஒரு வழக்கில் பிரதிவாதி தன்னை மோசடி செய்துவிட்டார் என்றோ, குறிப்பாக வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இசைவு தீர்ப்பாயத்திற்கு அதுசம்மந்தமான வழக்கை எடுத்து நடத்த முடியாது என்பதை, இசைவு தீர்ப்பாய சட்டம் பிரிவு 34 மற்றும் 48ல் சொல்லப்பட்டுள்ளது. மேலும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 4 பின்வருமாறு கூறுகிறது.

> 4. Particulars to be given where necessary.
>
> In all cases in which the party pleading relies on any misrepresentation, fraud, breach of trust, wilful default, or undue influence, and in all other cases in which particulars may be necessary beyond such as are exemplified in the forms aforesaid, particulars (with dates and items if necessary) shall be stated in the pleading.

என்று கூறுகிறது.

9.4) பிரதிவாதிதரப்பில் வாசுதேவன் என்பவர் இந்த வழக்கில் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் பிரதிவாதி நிறுவனத்தின் மேலாளர் கோஸ்வாமி தனக்கு

சாட்சியமளிக்க அதிகாரம் தந்திருப்பதாகக் கூறி பி.வா.சா.ஆ.2 ஐ குறியீடு செய்துள்ளார். பிரதிவாதி சார்பாக சாட்சியமளிக்க மேற்படி வாசுதேவனுக்கு எந்தவிதமான பவர் பத்திரம் அளிக்கப்படவில்லை. ஆக, பிரதிவாதி அலுவல் பணி செய்துவரும் முகவரியில், வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதால், இந்த நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை விசாரிக்க முழு அதிகார வரம்பு உள்ளது என தீர்மானிக்கப்படுகிறது. ஆக, எழுவினா 1 ல் வாதிக்கு அனுசரணையாக முடிவு செய்யப்படுகிறது.

10) **<u>எழுவினா 2 மற்றும் 4</u>** :

மேற்படி எழுவினா 2 படி பிரதிவாதி வாதி கோரிய தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டவரா? என்பதாகும். இந்த வாதி செய்திருக்கின்ற ஒப்பந்தப்படி பழைய பைப்புகளை அகற்றிவிட்டு, பிரதிவாதி நிறுவனத்தின் புதிய பைப்புகளை பொறுத்தவேண்டும் என்பதாகும். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் பிரதிவாதி நிறுவனத்தின் மேலாளர் என்ற நிலையில் கோஸ்வாமி என்பவர் கையெழுத்திட்டுள்ளார். ஆனால், மேற்படி பிரதிவாதி நிறுவனத்தின் மேலாளர் கோஸ்வாமி இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. சாட்சியமளிக்க முன்வரவில்லை. வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள், இந்த வாதியால் பிரதிவாதிக்கு நிலுவைத் தொகைகளைக் கேட்டு அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் வவுச்சர்கள் ஆகும். அதேபோல் வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆனது இந்த வாதியால் வேலை முடிக்கப்பட்டுவிட்டது என்றும், அந்த இடத்தில் இருக்கிற தன்னுடைய வேலைப் பொருட்களை எடுத்துக்கொள்ள அனுமதி கேட்டும் அனுப்பப்பட்ட கடிதங்கள் ஆகும். ஆனால், மேற்படி கடிதங்களுக்கு எந்தவொரு முறையான பதிலும் பிரதிவாதிதரப்பில் அனுப்பப்படவில்லை. வாதி செய்த பணியில் வா.சா.2 லேபர் கான்ட்ராக்ட் எடுத்து, வாதி சொன்ன வேலையை செய்துமுடித்து அதுசம்மந்தமாக சம்பளம் பெற்றதாகக் கூறியுள்ளார்.

10.2) இந்த பிரதிவாதிதரப்பில் பி.வா.சா1 ஆக விசாரணை செய்யப்பட்ட வாசுதேவன் என்பவரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. வாதி தங்கள் நிறுவனத்திற்கு 21.3.2010 பணிகளை முடித்தது சம்மந்தமாக 3,03,325/- கேட்டும், 02.07.2010 ல் 2,42,000/-த்திற்கு பில் வரவேண்டும் என்றும் கடிதம் அனுப்பினார் என்றும், அதற்கு தாங்கள் அந்த பணத்தை அனுப்பவில்லை என்றால் சரியல்ல என்றும், வாதிக்கு பணத்தை திரும்ப செலுத்தியது சம்மந்தமாக ஆவணங்களை எதுவும் ஒப்படைக்கவில்லை என்றும், வேலை முடிந்துவிட்டதாக வாதி கேட்டுக்கொண்டதன்பேரில், பிரதிவாதி நிறுவனம் வாதிக்குரிய தளவாடங்களை எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியது என்றும், ஒப்பந்த வேலை முடிந்தால் மட்டுமே அவ்வாறு

தளவாட சாமான்களை எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படும் என்றாலும் சரிதான் என்று கூறியுள்ளார். மேலும், வாதிக்கு தாங்கள் எந்தவொரு தொகையும் செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், வாதியிடம் செய்துகொண்ட பணபரிவர்த்தனைகள் அனைத்தும் விஜயா வங்கி கருமலைக்கூடல் கிளை மூலம் செய்துகொண்டுள்ளோம் என்றால் அவ்வாறு இருக்கலாம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆக, வாதி பிரதவாதி நிறுவனத்தோடு ஏற்படுத்திய வா.சா.ஆ.1 ஒப்பந்தப்படி பணிகளை முடித்தது சம்மந்தமாகவும், பணிகளை முடித்தவுடன் தளவாட பொருட்களை எடுக்க அனுமதி பெற்றுக்கொண்டதும், பிரதிவாதி அனுப்பிய கடிதம் மற்றும் பில்களுக்கு உரிய பதில் அனுப்பாமலும், தாங்கள் அவ்வாறு பணத்தை செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமலும், குறிப்பாக பிரதிவாதி தரப்பில் இந்த வழக்கை நடத்துவது யார் என்பதை பிரதிவாதி தரப்பில் தெளிவுபடுத்தாத காரணத்தினாலும், வாதி இந்த வழக்கில் கோரியுள்ள வழக்குத் தொகையை, வட்டியுடன் திரும்ப செலுத்த பிரதிவாதி கடமைப்பட்டவர் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

10.3) மேலும், பி.வா.சா.1 க்கு சாட்சியம் அளிக்க, வழக்கு நடத்த பிரதிவாதி எந்தவொரு அதிகாரமும் வழங்கியதாக தெரியவில்லை. Authorisation Letter மட்டும் கொடுத்துள்ளார். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்று வாதிதரப்பில் வாதம் செய்யப்பட்டது. உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 6 விதி 14 ஐ பார்க்கும்போது,

> “Production of a power of attorney or written authorisation is not compulsory; but it must be shown, to the satisfaction of the court, that the agent has sufficient authority to represent even an oral authorisation will be sufficient”

என்று கூறுகிறது. ஆக, Authorisation letter பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யும் சமயம் ஆட்சேபனை செய்யப்பட்டது. இந்த பிரதிவாதிதரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 3 விதி 1ன் படி முறையாக அனுமதி பெறப்பட்டு, பிரதிவாதிதரப்பில் வழக்கு நடத்த பி.வா.சா.1 க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், பி.வா.சா.1 சாட்சியம் ஏற்புடையதுதான் என்று தீர்மானிக்கப்படுகிறது.

The Madras High Court Observed in K.Santhanam v. S.Kavitha : 2011-1 CTC 286; 2011-1LW 66; 2011-3 MLJ 34, as under:

> 16. Thus, it is seen that while Order III, enables the holder of a power of attorney to appear, apply and act on behalf of a party to a suit, as his recognised agent, Order VI, Rule 14 (pleading to be signed), enables any

person duly authorised by a party to sign the pleading if the party pleading is, by reason of absence or for other good cause, unable to sign the pleading. Thus, it appears from Order VI, Rule 14, that even in the absence of a power of attorney, a party to a suit is entitled to have the pleading signed on his behalf, by any person duly authorised by him to sign. This inference is inevitable on account of the difference in the expressions used in Order III, Rule 2, vis-a-vis Order VI, Rule 14. While Order III, Rule 2, uses the expressions "recognised agents" and "persons holding powers of attorney", Order VI, Rule 14, uses the phrase "any person duly authorised by him". Rule 15(1) of the Order VI (verification of pleadings), goes one step further and empowers "some other person" to verify the pleadings, if it is proved to the satisfaction of the Court that he is acquainted with the facts of the case."

10.4) இந்த வழக்கில் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கோஸ்சாமி ஆஜராகவில்லை மற்றும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை.

" It is evident from the Section 114 of the said act that the court is bound in every instance to presume against that party on whom the burden of proof is directed to lie. The said section also declares that the court may, in all cases whatever, draw from the facts before it, whatever inferences it thinks just. Nine of the most important of them are given by way of illustrations to the Sections. Illustration (g) deals with the presumption arising from withholding evidence. The conduct of the person withholding the evidence may be attributed to a supposed consciousness that the evidence, if produced, would operate against him."

ஆக, 2 மற்றும் 4 எழுவினா வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்படுகிறது.

11) <u>எழுவினா 3 :</u>

வழக்கு வாதிக்கு இவ்வழக்கினை தாக்கல் செய்ய வழக்குமூலம் உள்ளதா என்பதைப் பொறுத்து பரிசீலனை செய்கையில், வாதிக்கு தாவா தொகை கிடைக்கத்தக்கது என்றும், தாவா தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்கப்படவேண்டும் என்றும் மேலே கண்ட

விவாதங்களின்படி தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு வழக்குமூலம் உள்ளதாகவே, எழுவினா 3 க்கு வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

12) **எழுவினா 5 :**

வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன என்பதைப்பொறுத்து பரிசீலனை செய்கையில், மேலே கண்ட விவாதங்களின்படி வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதால், வேறு பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு ஆதரவாக வழங்கவேண்டியதில்லை எனவும், இவ்வழக்கு செலவுத் தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

13) இறுதியாக,

இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதி வழக்குரையில் கோரியபடி பிரதிவாதி, வாதிக்கு வழக்கு தொகையான ரூ.9,06,364/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஆறாயிரத்து முன்னூற்று அறுபத்தி நான்கு மட்டும்) த்தினை வழக்கு தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9% வட்டியுடன் செலுத்த வேண்டும் எனவும், பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை அசல் தொகை ரூ.6,85,600/- (ரூபாய் ஆறு லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து அறநூறு மட்டும்)த்திற்கு 6% வட்டியுடன் சேர்த்து தொகை செலுத்தவேண்டும் என்றும், இவ்வழக்கின் செலவுத் தொகைகளை வாதிக்கு பிரதிவாதி செலுத்தவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பிழைகள் சரி செய்யப்பட்டு என்னால் இந்நீதிமன்றத்தில் 2022-ஆம் வருடம் ஜுன் மாதம் 09-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/- S.முத்துராமன்
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

<u>வாதி தரப்பு சாட்சி:</u>

வா.சா.1 திரு.பார்த்திபன், த/பெ.அய்யம்பெருமாள்

வா.சா.2 திரு.சம்பத்குமார், த/பெ.கிருஷ்ணமூர்த்தி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.03.2010 | வாதி பிரதிவாதியின் கம்பெனியுடன் ஏற்படுத்திக்கொண்ட Letter of intent | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2 | 03.04.2010 | Invoice Bill 108 மற்றும் அதனுடன் சேர்ந்த கடிதம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 05.05.2010 | Invoice Bill 110 மற்றும் அதனுடன் சேர்ந்த கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 02.07.2010 | Invoice Bill 116 மற்றும் அதனுடன் சேர்ந்த கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 04.09.2010 | Invoice Bill 120 மற்றும் அதனுடன் சேர்ந்த கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 20.09.2010 | வேண்டுகோள் கடிதம் மற்றும் Madras cement registration form | அசல் |
| வா.சா.ஆ.7 | 11.10.2010 | பிரதிவாதி அனுப்பிய கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.8 | 13.11.2010 | பிரதிவாதி அனுப்பிய கடிதம் | நகல் |
| வா.சா.ஆ.9 | 16.12.2010 | வாதி பிரதிவாதிக்கு அனப்பிய கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.10 | 10.01.2011 | பிரதிவாதியின் சார்பு நிறுவனமான மெக்கேல் Pneumatics private Ltd கம்பெனி அனுப்பிய கடிதம் | |
| வா.சா.ஆ.11 | 07.10.2011 | வாதி அனுப்பிய கடிதம் | |
| வா.சா.ஆ.12 | 13.05.2012 | வழக்கறிஞர் அறிவிப்பு | |
| வா.சா.ஆ.13 | – | பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய கவர் | அசல் |
| வா.சா.ஆ.14 | – | பிரதிவாதி கம்பெனியின் சார்பு நிறுவனம் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை | அசல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி :</u>

பி.வா.சா.1 திரு. வாசுதேவன், த/பெ.சீனிவாசன்

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 12.01.2021 | பிரதிவாதி நிறுவனம் பி.வா.சா.1 சாட்சியம் அளிப்பதற்காக கொடுத்த Authorization Letter | மெயில் நகல் |
| பி. வா.சா.ஆ.3 | 07.06.2012 | வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பியதற்குண்டான அஞ்சல் ரசீது | போட்டோ நகல் |

Sd/– S.முத்துராமன்
சார்பு நீதிபதி,
மேட்டூர்.